# வாக்குமூலம்

## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.

## வழக்கு எண் : SC.No. 513/2021

## வழக்கு சாட்சி PW–13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆடிவேல் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கந்தசாமி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | ஆலங்குளம் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 12.03.2026.

**(2, 3ம் எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது ஆலங்குளம் காவல்நிலையத்தில் காவல்ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தென்காசி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, 07.09.2020ம் தேதி அப்போதைய சார்பு ஆய்வாளர் முத்துகிருஷ்ணன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த காவல்நிலைய குற்ற எண்.312/2020, சட்டப்பிரிவுகள் 448, 392, 397 இதச வழக்கில் திரு.சுரேஷ் முதல்விசாரணை செய்த வழக்குகோப்பினை நான் எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

13.09.2020ம் தேதி வழக்கின் சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டேன். முந்தைய புலன் விசாரணை அதிகாரி தயார் செய்த பார்வை மகஜர், மாதிரி வரைபடம் சரியாக இருந்ததினால் நான் தனியாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. பின்னர் சாட்சிகள் விஜயலட்சுமி, ஜெயபால், இராமையா, சையது சுலைமான் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மற்ற

சாட்சிகளை விசாரணை செய்ததில் முந்தைய புலன் விசாரணை அதிகாரியிடம் சொன்னது போல் என்னிடமும் கூறியதினால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

பின்னர் 09.10.2020 ம் தேதி, 14.00 மணிக்கு குற்றவழக்கு சம்பந்தமாக எதிரிகளை போலீஸ் பார்ட்டிகள் சகிதம் தேடி சென்றபோது, தென்காசி வாயக்கால்பாலம் அருகேயுள்ள சாந்தி தனியார் மருத்துவமனைக்கு கிழக்கேயுள்ள தரிசு நிலத்திலுள்ள கருவேலமரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்டிருந்த இவ்வழக்கில் ஏற்கனவே சந்தேகத்திற்கிடமான மேலமெஞ்ஞானபுரத்தை சேர்ந்த மணிகண்டன், அதே ஊரைச் சேர்ந்த ரமேஷ் மற்றும் மேலக்கடையநல்லூரைச் சேர்ந்த அருண்சுரேஷ் ஆகியோர்கள் போலீஸ் பார்ட்டிகளாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவர்களை பிடித்து விசாரிக்க விசாரணையில் மேற்படி எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டது தெரிய வந்ததால் எதிரிகள் 3 பேரையும் கைது செய்து விசாரித்தேன்.

இவ்வழக்கின் முதல் எதிரியான மணிகண்டன் என்பவர் சாட்சிகள் விநாயகம், அல்போன்ஸ் ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 14.05 மணி முதல் 15.00 மணி வரை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னுடைய காரையும், ரமேஷ் பயன்படுத்திய பைக் மற்றும் 3 செல்போன்களை ஒப்படைப்பதாக தெரிவித்தார். மேலும் இவ்வழக்கில் கொள்ளையடித்த நகைகளை தன்னை அழைத்து சென்றால் குணராமநல்லூர் கனரா பேங்கில் அடகு வைத்த நகையையும், மேலமெஞ்ஞானபுரத்தில் உள்ள எனது வீட்டிற்கு அழைத்து சென்றால் அங்கு மறைத்து வைத்துள்ள மீதமுள்ள நகைகளையும் எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.11** ஆகும்.

பின்பு இந்த வழக்கின் 2வது எதிரியான ரமேஷ் என்பவர் என்பவர் சாட்சிகள் விநாயகம், அல்போன்ஸ் ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 15.00 மணி முதல் 16.00 மணி வரை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னுடைய இருசக்கரவாகனத்தையும், மணிகண்டனுடைய காரையும், தாங்கள் பயன்படுத்திய 3 செல்போன்களையும் ஒப்படைப்பதாக தெரிவித்தார். மேலும் இவ்வழக்கில் கொள்ளையடித்த நகைகளை தன்னை அழைத்து சென்றால் குணராமநல்லூர் கனரா பேங்கில் தான் அடகு வைத்த நகையையும், மேலமெஞ்ஞானபுரத்தில் உள்ள மணிகண்டனின் வீட்டிற்கு அழைத்து சென்றால் அங்கு மறைத்து வைத்துள்ள மீதமுள்ள நகைகளையும் எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.12** ஆகும்.

பின்னர், அன்றைய தினம் 16.00 மணிக்கு எதிரிகள் கைது செய்யப்பட்ட இடத்தில் வைத்து எதிரிகள் ஆஜர் செய்த 3 செல்போன்கள், TN-76-M-3048 என்ற சன்னி கார், TN-79-0538 என்ற பல்சர் பைக் ஆகியவற்றை ஆஜர் செய்ததை சாட்சிகள் விநாயகம், அல்போன்ஸ் ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன்.

பின்னர், அன்றைய தினம் 16.45 மணிக்கு குணராமநல்லூர் கனரா பேங்கிற்கு சாட்சிகள் மற்றும் எதிரிகள் சகிதம் சென்று ரமேஷ் அடகு வைத்திருந்த 39.400 கிராம் எடை கொண்ட தங்கச்செயினை பெற்று ஆஜர் செய்தததை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.13** ஆகும்.

பின்னர், அன்றைய தினம் 17.15 மணிக்கு மேலமெஞ்ஞானபுரம் மணிகண்டனின் வீட்டில் வைத்து சாட்சிகள் மற்றும் எதிரிகள் சகிதம் சென்று மணிகண்டன் 448, 392, 397 இதச அவரது வீட்டின் கபோர்டில் மறைத்து வைத்திருந்த கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் மற்றும் சம்பவத்திற்கு பயன்படுத்திய பர்தா, ஸ்க்ரூ டிரைவ், சூ, தராசு ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.14** ஆகும்.

பின்பு அன்றைய தினம் 19.00 மணிக்கு எதிரிகள் மற்றும் சொத்துக்கள் சகிதம் நிலையம் ஆஜராகி உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி எதிரிகள் 3 பேரையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவங்கள் 91 முறையே **அ.சா.ஆ.15, அ.சா.ஆ.16, அ.சா.ஆ.17** ஆகும்.

(1 முதல் 8, 10 வரிசைகளில் உள்ள தங்க நகைகள் ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.). 3 செல்போன்கள் மற்றும் சிம்கார்டுகள் – அ.சா.பொ.2 வரிசை ஆகும். TN–76–M–3048 என்ற பதிவெண் கொண்ட சன்னி கார் – அ.சா.பொ.3 ஆகும். TN–79–0538 என்ற பதிவெண் கொண்ட பல்சர் பைக் – அ.சா.பொ.4 ஆகும். பர்தா, ஸ்குரூ டிரைவ், ரோஸ் கலர் பேக் ஒன்று, சிம் கார்டு ஒன்று, எடைத்தராசு ஒன்று, பேரகான் சூ ஒரு ஜோடி, பேட்டா சூ ஒரு ஜோடி ஆகியவை முறையே – அ.சா.பொ.5 வரிசை ஆகும்.

பின்னர், 10.10.2020ம் தேதி, சாட்சிகள் விஜயலட்சுமி, ஜெயபால் ஆகியோர்களை மீண்டும் விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு

செய்தேன். பின்பு அன்றைய தினம் சாட்சிகள் மாரியம்மாள், எல்சின், விநாயகம், அல்போன்ஸ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு 25.10.2020ம் தேதி வழக்கின் விசாரணையின் படி இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 448, 392, 397 இதச விலிருந்து சட்டப்பிரிவுகள் 448, 392, 397, 34 இதச ஆக சட்டமாறுதல்அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டமாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.18** ஆகும். பின்னர் சம்பவம் உண்மையென தெரிய வந்ததினால் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 448, 392, 397, 34 இதசவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகளை கைது செய்ததாக சொல்லியுள்ள இடத்தில் நான் தற்செயலாக சென்றேனா? இல்லை தகவல் தெரிந்து சென்றேனா? என்றால் எதிரிகளை தேடிச் சென்றேன். அரசு வாகனத்தில் தான் சென்றேன், என்னுடன் எத்தனை போலீசார் வந்தார்கள் என்று தற்போது ஞாபகமில்லை. சம்பவம் நடைபெற்ற காலக்கட்டத்தில் சாட்சிகள் விநாயகம், அல்போன்ஸ் அ.சா.2ன் கடையில் பணிபுரிந்தார்கள் என்றால் விசாரணையில் தெரிய வரவில்லை.

விநாயகம், அல்போன்ஸ் ஆகியோர்களை நான் தகவல் சொல்லி அழைத்து அவர்கள் வந்தார்கள். அவர்கள் தற்செயலாகத் தான் அங்கு நின்றார்கள். நான் அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை. சாந்தி ஹாஸ்பிட்டல் அருகே போக்குவரத்து மற்றும் ஆட்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடம் என்றால் சரிதான். எதிரிகளை கைது செய்து

விசாரித்ததற்கு ஒரு மணிநேரம் ஆனதா? என்றால் சுமார் 2 மணி நேரம் ஆனது.

அந்த இடத்தில் பொதுமக்கள் கூடினார்களா? என்றால் இல்லை. கைது செய்த இடத்தில் வைத்து தான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். வேறு போலீசாரிடம் அத்தாட்சியில் கையெழுத்து பெறவில்லை. சிம்கார்டுகள் எதிரிகள் யாரிடம் வாங்கினார்கள் என்று வழக்குகோப்பில் துலங்கும். சிம்கார்டு விற்றவர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை.

குணராமநல்லூர் வங்கியில் 2வது எதிரி அடகு வைத்ததற்கான இரசீதை கைப்பற்றினேனா? என்றால் இல்லை. வங்கியின் மேலாளரை இந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரிக்கவில்லை. 1ம் எதிரி மணிகண்டன் வீட்டிற்கு செல்வதற்கு கால் மணி நேரம் ஆனது. மேலமெஞ்ஞானபுரத்தில் 1வது எதிரி மணிகண்டனின் வீடு எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. கதவு எண் நான் குறிப்பிடவில்லை.

1வது எதிரியின் வீட்டில் எத்தனை அறை உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. நகைகளை சமையலையிலிருந்து எடுத்து தந்தாரா? படுக்கையறையிலிருந்து எடுத்து தந்தாரா? ஹாலில் இருந்து எடுத்து தந்தாரா? என்றால் அறை என்று தான் வழக்குகோப்பில் துலங்குகின்றது. 1ம் எதிரியின் வீட்டிலிருந்து நகைகள் கைப்பற்றியபோது 50 நபர்கள் கூடியிருப்பார்களா? என்றால் இல்லை. 4, 5 நபர்கள் நின்றிருப்பார்கள். அவர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை.

பர்தா, சூ, தங்க நகை எடை மிஷின்களை 1வது எதிரி எங்கிருந்து வாங்கினார் என்று வழக்கு கோப்பில் துலங்கும். இரசீது நான் தாக்கல் செய்யவில்லை. கடைக்காரர்களை நான் சாட்சியாக போடவில்லை. கார்

மற்றும் பைக்கை எந்த இடத்தில் வைத்து நான் கைப்பற்றினேன் என்றால் எதிரிகளை கைது செய்த இடத்தில் வைத்து கைப்பற்றினேன். என்னுடைய புலன் விசாரணையில் 1வது எதிரியின் தந்தைக்கும், அ.சா.2 ஜெயபாலனுக்கும் கொடுக்கல்-வாங்கல் இருந்ததாக துலங்கியது. 1ம் எதிரியின் தந்தை அ.சா.2 ஜெயபாலனிடம் ஒரு லட்ச ரூபாய் கடன் வாங்கியதாகவும், அதனை திருப்பி 1ம் எதிரியின் தந்தை கொடுத்ததாகவும் என்னுடைய விசாரணையில் துலங்கியது.

1ம் எதிரியின் தந்தையின் பத்திரத்தை அ.சா.2 வைத்திருந்ததாகவும், திரும்ப 1ம் எதிரியின் தந்தை கேட்டபோது கொடுக்காததினால் அவர்களுக்குள் மனவருத்தம் இருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரிகளின் பெயர்கள், அடையாளம், முகவரி முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் அடையாளம் மட்டும் சொல்லப்பட்டுள்ளது.

இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரியின் தந்தைக்கும், அ.சா.2 க்குமுள்ள மனஸ்தாபத்தை மனதில் வைத்து அ.சா.1 சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது கொடுத்த பொய் புகாரின் பேரில் பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை சரியாக புலன் விசாரணை செய்யாமல், ஒருதலைபட்சமாக விசாரணை செய்து குற்றபத்திரிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.13 18:32:30 +0530